செய்தி வெளியீடு எண் :26 நாள் :17.02.2018

**தேனி மாவட்டம்,**
**அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளின் நிர்வாகிகள்,**
**தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான மீளாய்வுக் கூட்டம்**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ந.வெங்கடாசலம், இ.ஆ.ப., அவர்கள்**
**தலைமையில் நடைபெற்றது:-**

*********

தேனி மாவட்டம், வடபுதுப்பட்டி நாடார் சரஸ்வதி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பள்ளிகல்வித்துறையின் சார்பில், அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளின் நிர்வாகிகள், தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான மீளாய்வுக் கூட்டம் இன்று (17.02.2018) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ந.வெங்கடாசலம், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசும்போது தெரிவிக்கையில், வருங்கால இந்தியா இளைஞர்களில் கைகளில் தான் உள்ளது என்பதனை கருத்தில் கொண்டு, கல்வி கற்காதவர்கள் இல்லாத மாநிலமாக தமிழகத்தை உருவாக்கிடவும், சிறந்த மனித வளத்தை உருவாக்கிடவும், பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்று தங்களுக்கும், தங்களது பெற்றோர்களுக்கும் மற்றும் தமிழகத்திற்கும் பெருமை சேர்த்திட என்பதற்காகவும், மாணவ, மாணவியர்களை ஊக்கப்படுத்தி கல்வி கற்க செய்திட தமிழக அரசு தனது நிதி வருவாயில் மூன்றில் ஒரு பங்கு நிதியினை கல்வி சார்ந்த திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்து வருகிறது. மேலும், மாணக்கர்களுக்கு சிறந்த கல்வியினை தனியார் பங்களிப்புடனும் வழங்கிட வேண்டும் என்பதனை கருத்தில் கொண்டு, அரசு தனியார் கல்வி நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்கி வருகிறது.

வருங்கால இளைஞர்களான தற்போதைய மாணவர்களுக்கு வழிகாட்டியாக திகழும் ஆசிரியர், ஆசிரியை பெருமக்கள் மாணவ, மாணவியர்கள் எதிர் கொள்கின்ற தேர்வுகளை கருத்தில் கொண்டு கல்வி சார்ந்த ஐயங்களை மாணவ, மாணவியர்கள் வினாவும் போது அதனை உரிய நேரத்தில் போக்கிட வேண்டும். மாணவ, மாணவியர்களுக்கு எழுத்துதிறன் தேர்வு, வாசிப்புத்திறன் தேர்வுகள் அவ்வப்போது நடத்தி அவர்களின் திறனை வெளிப்படுத்திட வேண்டும். கல்வியை தவிர்த்து மாணக்கர்களின் தனித்திறன்களை கண்டறிந்து அவர்களை ஊக்கப்படுத்தி சம்பந்தப்பட்ட துறை போட்டிகளில் பங்கு பெறச் செய்து அவர்களுக்கு நல் வழிகாட்டிகளாகவும், மாணவ, மாணவியர்கள் எதிர்காலத்திற்கான தங்களது துறைகளை தேர்வு செய்வதில் அவர்களுக்கு உற்ற நம்பிக்கையைப் பெற்ற ஆசானாகவும் திகழ்ந்திட வேண்டும். மேலும், ஆசிரியர்கள் தங்களிடம் பயிலுகின்ற மாணக்கர்களின் தரத்தினை அறிந்து, பின் தங்கிய மாணக்கர்களை நன்றாக பயிலச் செய்திட வேண்டும். நன்றாக பயிலுகின்ற மாணக்கர்களை முதல் தரத்திற்கு கொண்டு வர வேண்டும்.

ஆசிரியர்கள் சீரான இடைவெளியில் பெற்றோர்களை சந்தித்து, மாணவ, மாணவியர்களின் தரம் குறித்து எடுத்து கூறி மாணக்கர்களை மேன்மைபடுத்திட ஆலோசனைகள் வழங்கி மாணக்கர்கள் மீது பெற்றோர்களுக்கான கடமை மற்றும் பொறுப்புகளை உணர்த்திட வேண்டும். தனியார் கல்வி நிறுவன நிர்வாகிகள் ஆசிரியர் பெருமக்களுக்கு அரசால் வழங்கப்படுகின்ற நிதியினை எவ்வித காலதாமதமின்றி வழங்கிட வேண்டும். வருங்கால இளைய சமுதாயத்தினர் சிறந்தவர்களாகவும், நல்லொழுக்கமுடையவர்களாகவும், சமூகப் பொறுப்புள்ளவர்களாகவும், உருவாகுவதற்கு பள்ளி நிர்வாகம் மற்றும் ஆசிரிய பெருமக்கள் ஒருங்கிணைந்து தங்களது பங்களிப்பினை வழங்கிட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ந.வெங்கடாசலம்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி வசந்தி அவர்கள், மாவட்ட தொடக்க கல்வி அலுவலர் திரு.பெ.ந.கணேஷ் அவர்கள், பெரியகுளம் மாவட்ட கல்வி அலுவலர் திரு.வீ.செல்வம் அவர்கள், நாடார் சரஸ்வதி கலை மற்றும் அறிவியல் கல்லூரி செயலர் திரு.மகேஷ்வரன் அவர்கள், பள்ளி நிர்வாகிகள், தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தேனி.**